DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 398/2023**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW6 | Caste | : | |
| Name | : | கார்மேகம் | Age | : | 61 |
| F/N | : | கருப்பன் | Occupation | : | சார்பு ஆய்வாளர்(ஓய்வு) |
| Village | : | தேவேந்திரன் நகர் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 13th day of June 2024.

**13.06.2024**

**(2வது எதிரி ஆஜர். 1வது மற்றும் 3வது எதிரிகள் ஆஜராகவில்லை. கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது).**

**முதல் விசாரணை**

**1.** நான் தமிழ்நாடு காவல் துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது இராமநாதபுரம் மாவட்டம் தேவேந்திரன் நகரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 10.02.2023ம் தேதி நான் கேணிக்கரை காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. தர்மர் என்பவர் குற்ற எண். 59/2023, பிரிவுகள் 294(b), 342, 324, 506(ii) இதச வழக்கு கோப்பையை எனது பார்வைக்கு சமர்ப்பித்தார். கடந்த 10.02.2023-ம் தேதி வழக்கு கோப்பையை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 11.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சாகுல் ஹமீது மற்றும் அசரப் அலி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்பு சாட்சிகள் அலிபுகான், ருக்கையா பானு, குர்ஷிதா பானு, சாகுல் ஹமீது, அசரப்அலி மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் தர்மர் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

**2.** பின்னர் கடந்த 15.02.2023-ம் தேதி எதிரிகள் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று சென்றுவிட்டபடியால் அவர்களை கைது செய்யவில்லை. பின்னர் 11.03.2023ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட அலிபுகான் என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு. பிரகாஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சான்று பெற்றேன். **(அந்த விபத்து பதிவேடு அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (விபத்து பதிவேட்டை புலன்விசாரணை அதிகாரி மூலம் குறியீடு செய்வதற்கு எதிரி தரப்பில் எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்று எதிரி தரப்பு வழக்கறிஞர்**

**கூறுகிறார்).** பின்னர் இவ்வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவ இடத்திற்கும், கேணிக்கரை காவல்நிலையத்திற்கும் இடையே சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து கேணிக்கரை காவல்நிலையத்திற்கு சுமார் 30 நிமிடங்களில் வந்துவிடலாம். சம்பவ தினத்தன்று புகார்மனு கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். சம்பவத்திற்கு மறுநாள் தான் புகார் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவுடன் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படவேண்டும் என்றால் சரிதான். கேணிக்கரை காவல்நிலையத்தில் இருந்து சமூக நீதிமன்றத்திற்கு 10 நிமிடத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கு தினசரி வருவதற்கு ஒரு காவலர் நியமிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். 10 நாட்கள் கழித்து தான் புகார் வாக்குமூலமும், முதல் தகவல் அறிக்கையும் நீதிமன்றத்திற்கு வந்துள்ளது என்றால் சரிதான்.

2. மேற்படி காலதாமதத்திற்கான காரணத்தை குற்ற இறுதி அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகே உள்ள போஸ்ட்டை அப்புறப்படுத்தும் போது சம்பவம் நடைபெற்றுள்ளது என்றால் சரிதான். கடந்த 09.02.2023ம் தேதி ஹமாலியா என்பவர் அ.சா1 மீது புகார் மனு கொடுத்துள்ளார் என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. அந்த புகாருக்கு எதிர் புகாராகத்தான் அ.சா.1 இவ்வழக்கின் புகார் வாக்குமூலத்தை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் அ.சா.1க்கு எதிராக எதிரிகள் தாக்கல் செய்த O.S. No. 177/2021 வழக்கு இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மின்சார வாரியத்தில் பணிபுரியும் நபர்களை நான் இவ்வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். மருத்துவரால் தான் ஒரு நபருக்கு ஏற்பட்ட காயத்தை பற்றி சொல்ல முடியும் என்றால் சரிதான். விபத்துப்பதிவேட்டில் எந்த ஆயுதத்தால் அ.சா.1 தாக்கப்பட்டார் என்ற விவரம் உள்ளதா என்றால் இல்லை.

3. மருத்துவர் கொடுக்கும் சான்றிதழின் அடிப்படையில் தான் குற்ற இறுதி அறிக்கையில் காயத்தின் தன்மையை பற்றி குறிப்பிடுவோம் என்றால் சரிதான். மருத்துவர் No opinion என்று தான் சான்றிதழ் வழங்கியுள்ளார் என்றால் சரிதான். அதனால் காயத்தின் தன்மையை பற்றி என்றால் கூற இயலாது என்றால் சரிதான். அ.சா.1 ஹமாலியா என்பவரை தாக்கிவிட்டார் என்றாலும், அதில் இருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. புகார்தாரரிடம் இருந்து எந்தவித ஆவணத்தையும் நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். முறையாக விசாரணை செய்யாமல், சம்பவ இடம் செல்லாமல் எதிரிகள் மீது குற்றஇறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தனிநபர் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை

என்றால் சரியல்ல. புகார்தாரர் யோசனை செய்து பின்னிட்டு கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் தான் வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு வந்துள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

**(ஒப்பம்/–க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**